பதிவு அஞ்சல் மூலமாக :

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர் (பணியாளர்) அவர்களின்

செயல்முறை நடவடிக்கைகள்

வழங்குபவர் : திருமதி.எல்.பிரித்தா, பி.எஸ்ஸி.,

செ.மு.ந.எண்: 22512/எஸ்2/2022 நாள்: 19.07.2023

பொருள் : பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையரின் செயல்முறை ஆணை எண்.10837/எம்5/2022–2, நாள்: 12.07.2022 மற்றும் 15.07.2023.
2. மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர் (மண்டலம்) மதுரை கடித எண். 4807/அ/2022, நாள்:05.12.2022.
3. மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இணை இயக்குநர் (மண்டலம்) தூத்துக்குடி கடித எண். 2577/ஆ1/2022, நாள்:14.07.2023.

******

ஆணை :

பார்வை–1ல் காணும் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையரின் செயல்முறை நடவடிக்கையின்படி ஆதாரப் பணியான அலுவலக உதவியாளர் பணியிலிருந்து அமைச்சுப்பணியான இளநிலை உதவியாளர் பதவிக்கு பணி மாறுதலில் பதவியுயர்வில் பணியமர்த்தம் செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டதை தொடர்ந்து, கீழ்காணும் இளநிலை உதவியாளர்கள் அவர்களது பெயருக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள நாட்களில் பணியில் சேர்ந்துள்ளனர்.

| வ.எண் | பெயர் (திரு/திருமதி) | பணியில் சேர்ந்த நாள் | பணிபுரியும் அலுவலகம் |
|---|---|---|---|
| 1. | க.அழகேஸ்வரி | 19.07.2022 முற்பகல் | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர் (மண்டலம்) மதுரை |
| 2. | வீ.சிவசுப்பிரமணியன் | 18.07.2022 முற்பகல் | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இணை இயக்குநர் (மண்டலம்) தூத்துக்குடி |

மேற்காணும், பணியாளர்களது பணியினை தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, விதி (28)(1)–ன் படி இளநிலை உதவியாளர் பதவியில் அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் வரன்முறைப்படுத்தி ஆணை வழங்கப்படுகிறது.

மேலும், பணியில் சேர்ந்த நாள்முதல் இளநிலை உதவியாளர் பதவியில் தொடர்ந்து வரும் மூன்றாண்டுகளில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைத்தும் ஆணையிடப்படுகிறது.

தமிழ்நாடு அமைச்சுப்பணிகளுக்கான சிறப்பு விதிகளின் விதி 34–ன் படி, தகுதிகாண் பருவ காலத்தில், தமிழ்நாடு மீன்துறை நடைமுறை நூல் பாகம் 1 –ல் தேர்ச்சி பெற வேண்டும். மேலும், பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் வழங்கப்படும் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படைப் பயிற்சியினை முடிக்க வேண்டும், தவறின் அவர்களது இரண்டாவது மற்றும் அதற்கடுத்த ஆண்டு ஊதிய உயர்வுகள் திரண்ட பயனின்றி நிறுத்தி வைக்கப்படும்.

மேற்குறித்த தேர்வுகளில் அதிகபட்சமாக 5 ஆண்டு காலம் தேர்ச்சி பெறாமல் இருந்தால் இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பட மாட்டாது. மேலும், பதவி இறக்கம் செய்ய நேரிடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

20.7.23

துணை இயக்குநர் (பணியாளர்)
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

பெறுநர்

1. திருமதி.க.அழகேஸ்வரி,
   இளநிலை உதவியாளர்
   மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர் (மண்டலம்) மதுரை – மூலமாக
2. திரு.வீ.சிவசுப்பிரமணியன்,
   இளநிலை உதவியாளர்,
   மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இணை இயக்குநர்(மண்டலம்) தூத்துக்குடி– மூலமாக

நகல்

1. சம்பந்தபட்ட மண்டல மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இணை/துணை இயக்குநர்கள்
   – தனியரின் பணிப்பதிவேடு மற்றும் பதிவுத்தாள் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. அதனை பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புகை அளித்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
2. எம்5 – உதவியாளர், தலைமை அலுவலகம்.
3. எஸ்2 – இருப்பு கோப்பு.

CamScanner